ஈரோடு மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை நடவடிக்கைகள்

முன்னிலை:- திரு.அர்பித் ஜெயின், இ.ஆ.ப.,

ந.க.எண். இ1/3852/2025 (மண்டலம்-1) நாள்.27.03.2026

பொருள் :- குடியிருப்பு மனைப்பிரிவு - ஈரோடு மாநகராட்சி - மண்டலம்-1- சூரியம்பாளையம் ஆ கிராமம், வார்டு -3 - ரீ.ச.எண். 322/1B1- ல் 1.03 ஏக்கர் (அ) 4170.00 ச.மீ பரப்பளவு கொண்ட 15 குடியிருப்புகள் கொண்ட மனைப்பிரிவிற்கு - தொழில் நுட்ப அனுமதி வரைபடம் - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), சித்தோடு புதுநகர் வளர்ச்சி குழுமம், ஈரோடு அவர்களால் வழங்கப்பட்டுள்ளது- இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :-

1. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 13686/2017/LA1, நாள்.08.09.2017.
2. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1) துறை நாள். 04.12.2019
3. அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நவ4(3) நாள்.04.05.2017.
4. அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.09.12.2020.
5. நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களின் சுற்றறிக்கையின் ந.க.எண்.12843/2022/TP-2 நாள்.20.10.2022
6. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), சித்தோடு புதுநகர் வளர்ச்சி குழுமம், ஈரோடு அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். HVEVRC4/2025/TCP நாள்:24.10.2025
7. மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலை மற்றும் பொது இடம் தானசாசன பதிவு எண். 6176/2025, நாள்.19.09.2025 மற்றும் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், சென்னை தானசாசன பதிவு எண். 6177/2025, நாள்.19.09.2025
8. ஈரோடு மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.160 நாள். 26.02.2026

.....

உத்தரவு :-

பார்வை 1,2,3,4,5-ல் காணும் அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள தெளிவுரைகளை பின்பற்றியும், பார்வை-6-ல் காணும் கடிதத்தின் படியும், பார்வை 8-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படியும், ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1-க்குட்பட்ட, வார்டு-3, சூரியம்பாளையம் ஆ கிராமம், ரீ.ச.எண். 322/1B1-ல், 1.03 ஏக்கர் (அ) 4170.00 ச.மீ பரப்பளவுள்ள, 15 குடியிருப்புகள் கொண்ட மனைப்பிரிவிற்கு உறுப்பினர் செயலர்/ துணை இயக்குநர் (பொ), மாவட்ட ஊரமைப்பு அலுவலகம், சித்தோடு புதுநகர் வளர்ச்சி குழுமம், ஈரோடு அவர்களின் இணையதள செயல்முறை ந.க.எண். HVEVRC4/2025/TCP நாள்:24.10.2025-ல் மனைப்பிரிவு அனுமதி SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL NO.328/2025 மற்றும் திட்டமிடல் அனுமதி SWP/DTCP/ERODE(CNTDA)/PLANNING PERMISSION NO.11/2025 என எண்ணிடப்பட்டு, தொழில்நுட்ப அனுமதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பார்வை 7-ல் காணும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்கள் ஆகியவை தானசாசன பத்திர எண். 6176/2025, நாள்.19.09.2025 மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கான தானசாசன பதிவு எண். 6177/2025, நாள்.19.09.2025-ன் படி ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் பார்வை-6-ல் காணும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022/TP2 நாள்.20.10.2022-ன் படி சாலைகள் அமைக்கப்பட்டு, அடிப்படை வசதிகளுக்காக செலுத்தப்பட வேண்டிய உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்டு இரசீது இணைக்கப்பட்டுள்ளது. [இரசீது எண்.056/CP/25-26/0116976 நாள். 16.03.2026], (Demand Notice No.

LA/056/2026/003/000011). பார்வை 4-ல் காணும் அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.09.12.2020-ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் 5 (IV)-ன் படியும் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி வரைபடம் அங்கீகரித்து உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள் :

1) தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019-இல் மனைப்பிரிவிற்காக விதிக்கப்பட்டுள்ள அனைத்து விதிகளும் இம்மனைப்பிரிவிற்குப் பொருந்து . எனவே, பொருத்தமான விதிகள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டும்.

2) மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ, வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

3) அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே Tamil Nadu Combined Development Building Rule 2019-ல் குறிப்பிட்டுள்ள Residential Use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.

4) மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயரழுத்த மின்கம்பி பாதை / தந்தி கம்பி பாதை அமைந்தால் கம்பி பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனை வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றியமைக்க வேண்டும்.

5) மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

6) மனுதாரர் குடியிருப்பு மனைக்கு தொடர்புடைய உள்ளாட்சியிடமிருந்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் நகர் ஊரமைப்புத்துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

7) (அ) மேற்படி குடியிருப்பு மனைக்கு ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் தொழில்நுட்ப அனுமதி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. என்பதால் குடியிருப்பு மனைக்கு இட உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

(ஆ) மேற்படி குடியிருப்பு மனைக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும் போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும்.

8) மனுதாரர் சமர்ப்பித்துள்ள நிலஉரிமை ஆவணங்களின்படி நிலஉரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நிலஉரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

9) நிலஉரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறிவிக்கப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களால் ரத்து செய்ய பரிந்துரைக்கப்படும். மேலும் மாநகராட்சியால் வழங்கப்பட்ட இறுதி மனைப்பிரிவு ஒப்புதலும் ரத்து செய்யப்படும்.

10) விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு, நகர் ஊரமைப்புத்துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

11) தள பரப்பு குறியீடு எண். (FSI) TNCDBR 2019-ன் படி அனுமதிக்கப்படுகிறது.

12) கோவில், தேவாலயம், மசூதி ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டிருந்தால், அம்மனைகளை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை தேவாலயம், மசூதி ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டிருந்தால், அம்மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

13) தமிழ்நாடு நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் மனைப்பிரிவு அமைந்தால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்பு சட்ட அதிகாரிக்கு தெரிவித்தல் வேண்டும்.

14) 1894- ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 4 மற்றும் நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றம் நிலச் சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பாக உள்ளாட்சி மற்றும் உறுதிமொழியின் பேரில் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இம்மனைப்பிரிவிற்கான நிலம் மேற்படி சட்டங்களின் நடவடிக்கைகளுக்கு உடன்படின், அதற்கு மனுதாரரே பொறுப்பாவார்.

15) மேலும், மேற்படி சட்டங்களின்படி நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதப்பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதை உறுதி செய்து மன நிறைவு அடைந்த பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

16) மாநகராட்சி / அரசு அனுமதியின்றி மனைப்பிரிவில் அலங்கார வளைவு அமைக்கக்கூடாது.

சிறப்பு நிபந்தனை :

1. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப் பத்திரம், குத்தகைப் பத்திரம், பட்டா தானப் பத்திரம், பொது அதிகாரப் பத்திரம், மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.
2. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை மற்றும் ஈரோடு மாநகராட்சி பொருத்தமான அமைப்புகள் அல்ல.

தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடுகள் விபரம்:

மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	=	1.03 ஏக்கர் (அ) 4170.00ச.மீ
ஒதுக்கிய மனைகள்	=	15 மனைகள்
பொது ஒதுக்கீடுகள்: மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை		
மனைப்பிரிவு சாலை பரப்பு	=	935.28 ச.மீ
தேவையான பூங்கா பரப்பு	=	மனைப்பிரிவின் மொத்தப் பரப்பளவு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு)x 10%
பூங்கா பரப்பு	=	(4170.00 - 935.28) x 10% = 323.47 ச.மீ(10.00%) (323.47 ச.மீ ஈடாக மனுதாரரால் அரசு வழிகாட்டு மதிப்பீடு தொகை செலுத்தப்பட்டுள்ளது).
பொது உபயோகம் தேவையான பரப்பு	=	(மனைப்பிரிவு பரப்பு - மனைப்பிரிவு சாலை பரப்பு)x 0.5% (4170.00-934.56) x 0.5% = 16.18 ச.மீ.
பொது உபயோகம் பரப்பு (A):	=	18.00 ச. மீ (0.56%) தான ஆவண எண்: 6176/2025, நாள்.19.09.2025-ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகத்திற்காக உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை, பொது உபயோகம் (B):	=	16.95 ச.மீ(0.52%) தான ஆவண எண்.6177/2025, 19.09.2025 -ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.
கட்டிட வரம்பு	=	9.0மீ வரை அகல சாலைக்கு 1.50மீ விடப்படவேண்டும்.
மூலை முடக்கு	=	7.20மீ முதல் 12.0மீ வரை அகலம் உள்ள சாலைக்கு 1.50மீ x 1.50மீ விடப்படல் வேண்டும்.

மனைப்பிரிவிற்கு மாநகராட்சிக்கு தொகை செலுத்திய விபரம்:

வ.எண்	தொகை செலுத்தப்பட்ட தலைப்பு	தொகை (ரூ)
1	அடிப்படை வசதிகள் வைப்பு தொகை	2,00,000.00/-
2	கூராய்வு கட்டணம்	15000.00/-
3	தெருவிளக்குகள் அமைப்பதற்கான கட்டணம்	99,000.00/-
4	மனைப்பிரிவு உட்பிரிவு கட்டணம்	6255.00/-
5	Display Board (காட்சிப் பலகை)-Other fees layout Approval	5,000/-
6	மனைப்பிரிவு - கொடி நாள்	20,000 /-
	மொத்தம்	3,45,255.00/-

வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UD4 (1)) துறையின் அரசாணை (M.S) எண். 141 நாள். 16.07.2022-ன்படி மனைப்பிரிவில் மனைபிரிவு உரிமையாளரால் மேற்கொள்ளப்பட்ட அடிப்படை வசதிகள் 5 ஆண்டு வரை அல்லது 60 சதவீதம் மனைகள் அபிவிருத்தி அடையும் வரை பராமரிக்கபட வேண்டும். என நிபந்தனை விதிப்பதுடன் மனைப்பிரிவு உரிமையாளரால் மேற்சொன்ன காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள தவறும் பட்சத்தில் தாங்கள் செலுத்திய வைப்பு தொகையிலிருந்து மாநகராட்சியால் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வைப்பு தொகை ஈடு செய்யப்படும் எனவும் நிபந்தனை விதிக்கப்படுகிறது.

27/3/26

ஆணையாளர்,

ஈரோடு மாநகராட்சி

26/3/26

இணைப்பு:-

ஒப்புதல் வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கான வரைடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் ஒரு தொகுப்பு.

பெறுநர்:-

திரு.சின்னசாமி மற்றும் மூவர்,

130/8, அமுதபிரியா நகர்,

எல்லப்பாளையம், பெரியசேமூர், ஈரோடு-638 004

97157 44540

நகல்:

1. கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், ஈரோடு மாவட்டம்
2. வட்டாட்சியர், ஈரோடு வட்டாட்சியர் அலுவலகம், ஈரோடு மாவட்டம்
3. உதவி இயக்குநர், (நில அளவை), ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,, ஈரோடு
4. சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், பெருந்துறை
5. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) ஈரோடு மாவட்டம், ஈரோடு
6. தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமம் (TNRERA), சென்னை.